**பதவி ஸ்ரீபுர பிரதேச சபை**
**திருகோணமலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 மே 04 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை மற்றும் முகாமைத்துவ அறிக்கை முறையே 2020 ஆகஸ்ட் 12 மற்றும் 2020 ஆகஸ்ட் 12 ஆந் திகதிகளில் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பதவி ஸ்ரீபுர பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்கீட்டுக் குறைபாடுகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | சேவைக்கான கட்டண வருமானம் ரூபா 70,440 வால் குறைவாகவும் நடைமுறைப் பொறுப்பில் பல்வேறு வைப்பு மீதி அதன் பெறுமதியில் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | காலப் பிரிவிற்கேற்ப உரிய வருமானம் சரியாக அடையாளங் காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டிலே உரிய கணக்கிற்கு மாற்றம் செய்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |
| (ii) | முன்னைய வருடத்தில் இடம்பெற்ற கணக்கீட்டு குறைபாடுகளை சரி செய்வதற்காக ரூபா 3.536,718 தொகை வருமானங்கள் கடன்பட்டோர் வரவு வைத்து வருமானங்கள் கணக்குகளுக்கு செலவு வைத்ததால் அந்த அளவில் மீளாய்வாண்டில் வருமானங்கள் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | காலப் பிரிவிற் கேற்ப வருமானம் அடையாளங் காணப்பட வேண்டும். | எதிர்வரும் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது கணக்காய்வின் மூலம் தெரியப்படுத்தியுள்ளதைப் போன்று வருமானங்கள் கடன்பட்டோர் கணக்கு வரவு வைத்து திரண்ட நிதியத்திலிருந்து செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |
| (iii) | முன்னைய வருடத்திலே கைவிடப்பட்டிருந்த ரூபா 436,788 அட்டுறுச் செலவுகள் மீளாய்வாண்டிலே செலவுகள் | சரியாக கணக்கிடப்படவேண்டும். | சரியாக கணக்கிட நடவடிக்கை எடுப்பதாக தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்குகளில் பதிவு செய்யப்பட்டுள்ளதால் மீளாய்வாண்டிலே செலவுகள் ரூபா 436,788 வால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | | |
| (iv) | முன்னைய வருடத்தின் கணக்கீட்டுக் குறைபாடுகளான மூலதனம் சரிசெய்யப்படுவதனால் தற்போதைய வருடத்தின் மூலதன வருமானங்கள் ரூபா 1,982,058 வால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | காலப் பிரிவிற்கேற்ப வருமானங்கள் அடையாளங் காணப்பட வேண்டும். | எதிர்வரும் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது கணக்காய்வின் மூலம் தெரியப்படுத்தியுள்ளதைப் போன்று மூலதன வருமானங்கள் கடன்பட்டோர் கணக்கில் வரவு வைத்து திரண்ட நிதிய கணக்கில் செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |

**(ஆ) கணக்காய்விற்கான தேவையான எழுத்துமூலமான சான்றுகளின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிகக்ப்படாமையின் காரணமாக ரூபா 98,819,656 மொத்தம் 05 விடயங்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாக அவதானிப்பதற்கு முடியாது போனது. | சான்றுகள் முன்வைக்கப்படவேண்டும் | குறிப்பிடப்பட்ட பெறுமதிக்கு முன்னைய வருடங்களின் பதிவேடுகளை பரீட்சித்து எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கைகள் எடுப்பதாக தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |

**(இ) இணங்காத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐந்தொகையில் காண்பிக்கப்பட்டுள்ள 02 கணக்குகளின் மீதிகள் உப பதிவேட்டுடன் ரூபா 4,091,178 வேறுபட்டுள்ளது. | வைப்பு விபரங்களை அடையாளங் கண்டு கொள்வதற்கு அல்லது அதற்குரிய பொருத்தமான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உப பதிவேடுகளுக்குரிய இந்த பெறுமதிகளுக்காக தேவையான பதிவேடுகள் மிகவும் பழைய வருடங்களிலிருந்து இடம்பெற்ற காரணத்தினால் அந்த பதிவேடுகளை கண்டறியக்கூடிய கடினத்தன்மையினால் அது தொடர்பான உப பதிவேடுகள் மற்றும் இறுதிக் கணக்குகளின் மீதிகளை சமப்படுத்துவதற்கு இதுவரையும் தவறியிருந்ததாக தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம் | | | |
| (i) 159 ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டிய ரூபா 1,057,300 நிலுவை வருமானம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டம். | எஞ்சிய நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அத்தோடு எதிர்கால செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுப்பதாக தாழ்மையுடன் அறியத் தருகின்றேன். |
| (ஆ) 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாக) விதிகள் | | | |
| i. 59 ஆவது விதி | ஒவ்வொரு வருட ஆரம்பத்திலும் சபையின் அதிகார எல்லை பிரதேசத்தில் இடம்பெறும் வியாபார மற்றும் கைத்தொழில் தொடர்பான கணக்கெடுப்பொன்று பிரதேச சபையினால் மேற்கொண்டிருக்கவில்லை. | வியாபார மற்றும் கைத்தொழில் தொடர்பாக கணக்கெடுப் பொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். | 2021 ஆம் ஆண்டிலிருந்து வருட ஆரம்பத்திலேயே கணக்கெடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அறிவுரைகள் வழங்கப்பட்டதென்பதை தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |
| ii. 218 ஆவது விதி | அனைத்து காணிகள் மற்றும் கட்டிடம் சம்பந்தமாக ஒவ்வொரு வருடத்திற்கும் ஒரு கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | கணக்கெடுப்பு இடம்பெற வேண்டும். | வாகனங்கள் மற்றும் வீதிகள் சம்மந்தமாக வருடாந்த கணக்கெடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படு மென்பதையும் ஏனைய சொத்துக்கள் சம்பந்தமாக வருடாந்த பராமரிப்பு மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படு மென்பதையும் தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 880 | பிணை வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்களினால் ஊழியர் பிணை வைப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. | பிணைப் பணத்தை வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பிணை வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிர்காலத்தில் பிணைப் பணத்தை வைப்புச் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படு மென்பதை தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |
| (ii) | நிதிப்பிரமாணம் 571 | முந்த ஆண்டுகளுடன் தொடர்புடைய பொது வைப்புத்தொகை ரூபா.4,565,419 மற்றும் ஒப்பந்த வைப்புத்தொகை ரூபா. 1,695,431 தீர்க்கப்படவில்லை. | கடந்தகாலவைப்பு குறித்து நிதிப்பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டம் | எதிர்காலத்தில் இந்த வைப்புக்கள் சபை நிதிக்கு மாற்றவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படு மென்பதை தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,088,926 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 11,185,706 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா000' | ரூபா000' | ரூபா000' | ரூபா000' | ரூபா000' | ரூபா000' | ரூபா000' | ரூபா000' |
| வாடகை | 600 | 658 | 569 | 130 | 1,147 | 1,321 | 1,233 | 57 |
| நீர்க் கட்டணம் | 7,500 | 7,082 | 6,434 | 647 | 7,000 | 7,343 | 7,078 | 116 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 350 | 496 | 395 | 274 | 483 | 856 | 673 | 18 |
| மொத்தம் | 8,450 | 8,236 | 7,398 | 1,051 | 8,630 | 9,520 | 8,984 | 191 |

### 2.2.2 நீர்ப் பட்டியல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதி தினத்தில் ரூபா 557,303 நிலுவை நீர்ப்பட்டியல் வருமானமொன்று அவதானிக்கப்பட்டது. | நிலுவை நீர்ப்பட்டியல் வருமானங்கள் அறவிடப்பட வேண்டும். | முன்னைய வருடத்திற்குரிய நிலுவை நீர்ப்பட்டியல் வருமானங்கள் தற்போது அறவிடப்பட்டு முடிவடைந்துள்ளது என்பதை தாழ்மையுடன் அறியத் தருகின்றேன். |

### 2.2.3 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 130,256 நிலுவையாக உள்ள வாடகை வருமானமொன்று இறுதி நிதிக் கூற்றில் வெளிக்காட்டப்பட்டாலும், கடை வாடகைகளுக்குரிய பதிவேடுகளை பரீட்சித்தலின் போது வருடத்திற்குரிய நிலுவை கடை வாடகை ரூபா 88,303 மாத்திரம் காட்டப்பட்டிருந்தது. | கடை வாடகை பதிவேடு சரியாக நாளதுவரையாக்கப் படவேண்டும். | இந்த தொகை 2015 ஆம் ஆண்டிலிருந்து நிலுவையாக உள்ளது இந்த நிலுவைத் தொகையை கணக்கெடுத்து எதிர்காலத்தில் அதை சரி செய்ய பொறுப்பான அதிகாரிகளக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்பதை தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |

### 2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ரூபா 247,250 ஆன நிலுவை அனுமதிபத்திர வருமானங்கள் மீளாய்வாண்டின் இறுதியில் இடம்பெற்றதுடன் அதில் ரூபா 149,550 நிலுவை வருமானம் முன்னைய வருட மற்றும் அதற்கு முன்னைய வருடத்திற்கான அறவிடப்பட வேண்டிய நிலுவை வருமானங்களாகும். | நிலுவை அனுமதிப் பத்திர வருமானம் அறவிடுதவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த நிலுவை அனுமதிப் பத்திர கட்டணம் 2018 ஆம் ஆண்டிற்கான இநுதிக் கணக்குகளில் தவறாக உள்ளிடப்பட்ட கட்டணமாகும் இதனை 2020 ஆம் ஆண்டில் சரி செய்ப்படும் என்பதை அறியத்தருகின்றோம். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பரிவின் கீழ் 28 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், உப விதிகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | உப விதிகளை தயாரித்த பின்னர் அதை அமுல்படுத்து வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | பிரதான காரணங்கள் 28 க்காக உப விதிகள் அமுல்படுத்தலுக்காக மாகாண சபைகள் உதவி ஆணையாளர் காரியாலயத்திற்கு ஆவணங்கள் அனுப்பப்பட்டிருப்பதுடன் இதுவரை அதற்கான மறுமொழி கிடைக்கப்பெறவில்லை என்பதுடன் மறுமொழி கடிதம் கிடைத்ததும் உடனடியாக மேலும் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |

**(ஆ) திண்மக்கழிவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| திண்டக்கழிவு முகாமைத்துவம் முறையாக செய்யப்படவில்லை | திண்டக்கழிவு முகாமைத்துவம் முறையாக செய்யப்படவேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகின்றேன். |

**(இ) சுற்றாடல் அனுமதிப்பத்திரம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் | கணக்கெடுப்பை மேற்கொண்டு | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக் |

| | | |
|---|---|---|
| நடைமுறைப்படுத்தப்படும் அது போன்ற முயற்சிகளுக்காக 2015 இலிருந்து 2019 வரை விண்ணப்பங்கள் 49 விநியோகிக்கப்பட்டிருந்தாலும் அதற்குரிய அனுமதிப்பத்திரம் 06 மாத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தது. | கைத்தொழில்களை அடையாளங் காண்பதற்கும் அதற்காக சுற்றாடல் அனுமதிப் பத்திரங்களை விநியோகிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கொள்வதற்காக விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலும் உரிய குறிகாட்டிகள் பூர்த்தி செய்யாததன் காரணமாக 06 சுற்றாடல் அனுமதிப்பத்திரங்கள் மாத்திரம் விநியோகிக்கப்பட்டு மீதமாகவுள்ளவைகளுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்படவில்லை |

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் 2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கமுடைய நிலைபேறான அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள நிலைபேறான அபிவிருத்தியின் நோக்கம், இலக்கு மற்றும் உரிய குறிகாட்டிகள் மீளாய்வாண்டில் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்திக்குரிய புதிய நோக்கம் அடையாளங் காணப்பட்டு நடைமுறைப்படுத்தப் பட வேண்டும். | பிரதேச சபையினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற நீர்ச் செயற்திட்டம் நிலைபேறான அபிவிருத்திக்குரியதாக இடம்பெற்றுக் கொண்டிருப்பதுடன் நிலைபேறான அபிவிருத்திக்குரிய நோக்கம், இலக்கு மற்றும் குறிகாட்டிக்கு உரிய வகையில் அந்த செயற்திட்டத்தின் வேலை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முன்னய ஆண்டுகளில் இருந்து கொண்டவரப்பட்ட முற்பணத் தொகை ரூபா. 180,654 தீர்ப்பதற்கு எந்தவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | செலுத்தப்படாத முற்பணத் தொகை தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் | 2013 முன்னோக்கி கொண்டுவரப்பட்ட இந்நிலுவை எதிர்காலத்தில் சரி செய்யப்படும் என்பதை தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) சபையின் கீழ் காணும் 07 பதவிகளுக்கான 13 உத்தியோகத்தர்களுக்கு வெற்றிடங்கள் உள்ளது. | நிலவுகின்ற வெற்றிடங்களை முழுமைப்படுத்திக் கொள்வதற்கு | வெற்றிடங்கள் முழுமைப்படுத்த வேண்டியதுடன் முக்கியதன்மையை கருத்திற் கொண்டு தொடர்புடைய |

| | | |
|---|---|---|
| | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிறுவனங்களுக்கு கடித ஆவணங்கள் அனுப்பப்பட்டுள்ளதென்பதை தாழ்மையுடன் அறியத் தருகின்றேன். |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 குறைபாவனையான சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான 03 வாகனங்கள் மற்றும் 01 வாகன பகுதி நீண்ட காலத்திலிருந்து பாவனைக்கு உட்படுத்தப்படாமல் குறை பாவனையாக காணப்பட்டது. | பொருத்தமானாதாக திருத்தங்களை மேற்கொள்வதற்கு பாவனைக்குட்படுத்து வதற்கு அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மஹிந்திரா கெப் வாகனம் நீர் செயற்திட்டத்திற்குரிய நீர் விநியோக நடவடிக்கைகளுக்காக திருத்தங்களை மேற்கொண்டு பாவனைக்குட்படுத்துவதற்கு சபை அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளதுடன் கைட்றெக்டர் 2018 பொருள் மெய்மையாய்வின் போது Sale செய்வதற்கு அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளதுடன் கைட்ரெக்டர் தற்போது பாவனைக்கு உட்படுத்த முடியுமான நிலையில் காணப்படுவதோடு, இரும்பு பவுசர் செயலிழந்து உள்ளது. |

**3.5 வாகன நிருவாகம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 13 வாகனங்களின் நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் கணக்காய்விற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை | மாதாந்த சராம்சம் மற்றும் நாளாந்த ஓட்டக் குறிப்பு என்பன உரிய தினத்தில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | மாதாந்த நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் எதிர்காலத்தில் அவசரமாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக தாழ்மையுடன் அறியத் தருகின்றேன். |
| (ஆ) சபையினால் பாவிக்கப்படுகின்ற 06 வாகனங்கள் முறையாக பிரதேச சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை | வாகனங்களின் உரிமை சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் உரித்தாக்குவதற்கான தேவையான முன் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படு மென்பதை தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |